**https://arimanokku.com/** UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

ARIMA NOKKU ISSN: 2320 - 4842 19-2 April 2025

**Published on 14, April-2025** **ISSN: 3049-2688 (Online)**

# அபிராமி அன்னையின் வருணனை

**முனைவர் ராதா. செ**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு விக்டோரியா கல்லூரி
பாலக்காடு மாவட்டம், கேரளா

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க காலம் கடந்த இலக்கியங்களில் தலை சிறந்து விளங்கியவை சிற்றிலக்கியங்கள் ஆகும். இச்சிற்றிலக்கியங்கள் பாடுபொருள்களிலும், இலக்கண முறைமைகளிலும் மாறுபட்டு தனிப்பெரும் சிறப்பினைக் கொண்டு விளங்கின. அந்தாதி இலக்கியங்கள் தன்னுடைய பாடுபொருள் தன்மையையும், சிறப்பினையும் கொண்டு சொல்லின் விளக்கமாக அமைகின்றது. அச்சிறப்பினைக் கொண்டு விளங்குவது அபிராமி அந்தாதியாகும். அபிராமி அந்தாதியில் பட்டரின் வர்ணனை சிறப்பினையும் பாடுபொருள் நெறியையும் விளக்குவதாக இவ்வாய்வு அமைகிறது.*

**திறவுச் சொற்கள்:** *அந்தாதி, வர்ணனை, அபிராமி.*

**முன்னுரை**

*அபிராமி பட்டர் என போற்றப்படும் சுப்ரமணிய பட்டரால், திருக்கடையூர் தலத்தில் அருள் செய்யும் அபிராமி அன்னையின் மீது பாடப்பட்ட 100 பாடல்களே அபிராமி அந்தாதி ஆகும். அந்தம் என்றால் முடிவு, ஆதி என்றால் துவக்கம் ஒரு பாடலின் முடிவாக அமையும் வார்த்தையை அடுத்த பாடலின் ஆரம்பமாகக் கொண்டு அபிராமி அன்னையை போற்றி பாடப்பட்டதால் இதற்கு அபிராமி அந்தாதி என்ற பெயர். அவ்வாறு அமையக் கூடிய பாடல்களில் வர்ணனைப் பற்றியச் செய்திகளை ஆய்வதே இவ்வாய்வுக் கட்டுயின் நோக்கமாகும்.*

**வர்ணனை**

*ஒரு படைப்பாளன், தன் சிந்தனையில் தோன்றும் காட்சிகளைப் படிப்பவர்களின் மனக்கண் முன்பே கொண்டுவரும் உத்திதான் வருணனை முறை. கற்பனையும் வருணனையும் இல்லாத எந்தவொரு படைப்பும் சிறந்த இலக்கியமாகாது. அந்த வகையில், அபிராமி அந்தாதியில் இவ்வருணனைகள் பொக்கிஷமாகக் கொட்டிக்கிடக்கின்றன. அவை வைரமாய் நம் கண்முன்னே மின்னிக் கொண்டிருக்கின்றன. இவ்வருணனையை, ஆள் வருணனை, இயற்கை வருணனை என்றும் இடம், காலம், நிகழ்ச்சி, கலை முதலிய பெயர்களிலும் வகைப்படுத்துவர். அபிராமிபட்டர், அபிராமி அன்னையைப் பலவாறாக வர்ணித்ததிலிருந்தே அவரது தீவிர சக்திவழிபாடு புலனாகின்றது. செம்மலர்ப் பாதங்களையுடைய அபிராமி தேவியே! என்று அன்னை அபிராமியை,*

> **"குனிதரும் சேவடிக் கோமளமே"** *(அபிராமி அந்தாதி. பா-4)*

*என்ற பாடலில் வருணனை செய்து மகிழ்கிறார். மகிடாசுரனது தலையின் மீது நின்று, அவனுக்கு அந்தாத்தைச் செய்தவளும், நீலநிறமுடையவளும், என்றும் அழியாத நித்திய கன்னிகையும் அன்னை அபிராமியே என்று.*

> **"அந்தரி நீலி அழியாத**
> **கன்னிகை ஆரணத்தோள்"** *(அபிராமி அந்தாதி. பா-8)*

*என்ற பாடலில் வருணிக்கிறார்.*

*தாட்சாயணி என்னும் பெயரை நீக்கிக் கொள்ள அக்காலத்தில் இமயமலையில் குழந்தைவடிவாக எழுந்தருளியவளே! என்றும், அடைந்தவர் திரும்பப் பிறவாத வீடுபேற்றின்பமான அபிராமி தேவியே என்றும்,*

***"அன்றும் பிறந்தவ ளேஅழி***
***யாமுத்தி ஆனந்தமே"***
*(அபிராமி அந்தாதி. பா-8)*

*என்ற பாடலின் மூலம் வருணனை செய்து மகிழ்கின்றார்.*

*பண்களுக்கும் இனிமையைக் கொடுக்கும் இனிய சொற்களையுடைய பைங்கிளியே! என்று அபிராமி அன்னையை,*

***"பண்ணளிக் கும்சொல் பரிமள***
***யாமளைப் பைங்கிளியே"***
*(அபிராமி அந்தாதி. பா-15)*

*என்ற பாடலில் வருணிக்கிறார். மேலும் இளமையான வஞ்சிக்கொடியே என்று அன்னையை,*

***"கொடியே இளவஞ்சிக் கொம்பே"***
*(அபிராமி அந்தாதி. பா-22)*

*என்ற பாடலில் வருணிக்கிறார்.*

*இன்பம் தரும் தேனே, அத்தேனை மெய்யன்பர்கள் பருகுவதனால் உண்டாகும் அன்புக்களிப்பே, எனது கண்ணின் மணியே என்றெல்லாம் அபிராமி அன்னையை,*

***"கள்ளே களிக்கும் களியே***
***அளியோன் கண்மணியே"***
*(அபிராமி அந்தாதி. பா-23)*

*என்ற பாடலில் வருணனை செய்கிறார்.*

*மாணிக்கமணி போன்றவளாகவும், அம்மணி யின் ஒளியாகவும், அணிந்த அந்த ஆபரணங் களுக்கும் அழகாகத் தெரிபவனாகவும், தன்னை அணுகாதவர்களுக்குப் பிணி போன்றவளாகவும், நன்னடியினைத் தஞ்சம டைந்தவர்களுக்கு பிறவிப்பிணியைப் போக்கும் மருந்தாகவும் இருப்பவள் அன்னை அபிராமியே என்பதை,*

***"மணியே மணியின் ஒளியே***
***ஒளிரும் மணிபுனைந்த***
***அணியே அணியும் அணிக்கழ பிணியே***
***பிணிக்கு மருந்தே***
***கேஅணு காதவர்க்குப்***
***அமரர் பெருவிருந்தே"***
*(அபிராமி அந்தாதி. பா-24)*

*என்ற பாடல் புலப்படுத்துது. ஒரே வடிவ மாகவும், பலவடிவங்களாகவும், உருவமற்றவ ளாகவும் இருப்பவன் அன்னை அபிராமி என்பறனை,*

***"ஒன்றே பல்வுருவே யரு***
***வோன் உமையவளே"***
*(அபிராமி அந்தாதி. பா-30)*

*என்ற பாடலில் அபிராமிபட்டர் உணர்த்து கிறார்.*

*பாம்பு படமெடுத்தாற்போன்ற அகன்ற அல்குலையுடையளாகவும், குளிர்ச்சியான இனிய சொற்களைப் பேசுபவளாகவும், வேதங்களையே தனது காற்சிலம்பாக அணிந்தவளுமாக அன்னை அபிராமி வீற்றிருக்கின்றான் என்பதை,*

***"படங்கொண்ட அக்குள் பளிமொழி வேதப்***
***பரிபுரையே"*** *(அபிராமி அந்தாதி. பா-42)*

*என்ற பாடலில் அபிராமிபட்டர் படம் பிடித்துக் காட்டுகிறார்.*

*யாழின் நரம்பிலிருந்து வரும் எழிசை வடிவாகத் திகழ்பவள் அன்னை அபிராமி என்று,*

***"நரம்பை அடுத்த இசைவடி***
***வாய்நின்ற நாயகி"*** *(அபிராமி அந்தாதி.பா-49)*

*என்ற பாடலில் வருணனை செய்கிறார். பாலைவிட இனிமையான சொற்களைப் பேசுபவள் அபிராமவல்லி என்பதை,*

***"பாயினும் சொல்இளி யாய்"***
*(அபிராமி அந்தாதி. பா-60)*

*என்ற பாடலின் மூலம் அபிராமிபட்டர் வருணிக்கிறார்.*

*திருமேனி அழகிற்கு வாரும் என்றும் ஈடாகாத ஆனந்தவல்லி அன்னை அபிராமி*

***"அழகுக்(கு) ஒருவரும் ஒவ்வாத***
***வல்லி அருமறைகள்"***
*(அபிராமி அந்தாதி. பா-71)*

*என்ற பாடலின் மூலம் உணர்த்துகிறார். தேன் உண்னும் வண்டுகள் மொய்க்கும் செந்தாமரை மலரில் வாழ்பவள் அன்னை அபிராமி என்பதை,*

***"அளியார் கமலத்தில் ஆரணங்கே"***
*(அபிராமி அந்தாதி. பா-82)*

*என்ற பாடலைக் கொண்டு வருணிக்கிறார். பாலும், தேனும் பாகும் போல இனிய பொழியினை பேசுபவர் அபிராம வல்லி என்பதனை,*

***"பாலையும் தேனையும் பாகையும்***
***போலும் பணிமொழி"***
*(அபிராமி அந்தாதி. பா-86)*

*என்ற பாடலின் மூலம் விளக்குகிறார். பின்னங்கீற்றுப்போல மென்மையான*

*இடைமிளையாடயவன் அன்னை அபிராமி என்பதை,*

**"மெல்லிய நுண்ணிடையின்
அனையாளை"** *(அபிராமி அந்தாதி.பா-91)*

*என்ற பாடலின் மூலம் வருணிக்கிறார்*

*அழிவற்ற குணக்குன்றென்றும், அருட்கட வென்றும், இமயத்து அரசனின் செல்வி யென்றும் அன்னை அபிராமியை,*

**"குன்றே அருட்சகட லேஇக
வான்பெற்ற கோமனமே"**
*(அபிராமி அந்தாதி. பா-95)*

*என்ற பாடலின் மூலம் அபிராமிபட்டர் வருணிக்கிறார்.*

*பொய்யாவைகளின் நெஞ்சினில் புகாமல் மெய்யடியார்களின் நெஞ்சில் உறையும் இளமையான பூங்குயில் போன்ற அபிராமி அன்னையே! என்று அபிராமி அன்னையை,*

**"பொய்வந்த நெஞ்சில் புக
யாமடப் பூங்குயிலே"**
*(அபிராமி அந்தாதி. பா-98)*

*என்ற பாடலில் வருணனை செய்து பகிழ்கின்றார்.*

## அபிராமி அன்னையின் திருவருள்

*இறைவனின் திருவருள் இல்லையெனில் நம்மால் ஒரு காரியத்தையும் செய்ய இயலாது. மனிதன் உலகில் உயிர்வாழ்ந்து கொண்டிருப்பதே இறைவனின் திருவருளால் தான். ஒரு மண்பானையில் ஒன்பது ஓட்டை கள் இருப்பின், அதன்வழியாக அப்பானை யில் உள்ள தண்ணீர் வெளியேறுவதில் எந்த ஆச்சரியமும் இல்லை. ஆனால், இவ்வளவு பெரிய காது, மூக்கு, வாய் முதலிய ஓட்டைகள் வழியே காற்று எள்ளளவும் வெளியே போகாமல் உள்ளதே அதுதான் ஆச்சரியம்! அதுதான் இறைவனின் திருவருள் இறைவனின் திருவருளை திருமுருக கிருபானந்தவாரியார்,*

**"புளி மிகவும் பிசுபிசுப்பு உடையது. அது கீழே விழுந்தால் மண் முதலியன ஒட்டி ஒருவருக்கும் பயனில்லாமல் போய்விடுமே என்று அதற்கு ஒரு [coat] உறை போட்டு ள்ளார்கடவுள்."**

*(திருமுருககிருவானந்தவாரியார், வாரியார் வழங்கும் கட்டுரைச் செல்வம். ப-180)*

*என்றும்,*

**"விண்ணிலே காய்க்கின்ற தேங்காய்க்குமேல் ஒரு கெட்டியான ஓடு, அதற்குமேல் கெட்டி யான நார் ஏன்? அவ்வளவு உயரத்திலிருந்து கீழே விழுந்தாலும் உடையாமல் இருப்பதற்கு இத்தனையும் எம்பெருமான் நமக்குப் படைத்தருளினார்."** *(திருமுருககிருவானந்த வாரியார், வாரியார் வழங்கும் கட்டுரைச் செல்வம். ப-181) என்றும்,*

**நாம் சாப்பிடும் போது நமது உணவை வாயில் அரைப்பதற்கு நீர் எங்கிருந்து வருகிறது? உமிழ்நீர் ஊறிவருகிறது. இதனை உண்டாக்கித் தந்தவர் இறைவன்.** *(திருமுருககிருவானந்தவாரியார், வாரியார் வழங்கும் கட்டுரைச் செல்வம். ப-181)*

*என்று கூறிய கூற்றுகள் ஆழ்ந்து நோக்குதற்குரியனவாகும்.*

## முடிவுரை

*நீண்ட ஆயுளையும், நோயற்ற வாழ்வினையும் எய்தவேண்டும் என்பதனை உணர்த்தும் பொருட்டும், அன்னையை வழிபட்டுத் திரும்பும் அந்நிலையிலேயே அண்ணலையும் வழிபட வேண்டும் என்பதன் பொருட்டுமே அன்னையும் அப்பனும் எதிரெதிரே நின்று திருக்காட்சியருளுகின்றனர், அன்னை அபிராமியின் தோற்றப் பொலிவினையும் குறிப்பிடுகின்றார்.*

*யாழின் நரம்பிலிருந்து வரும் ஏழிசை வடிலாகத் திகழ்பவள் அன்னை அபிராமி என்றும், தாட்சாயணி என்னும் பெயரை நீக்கிக் கொள்ள அக்காலத்தில் இமயமலை யில் குழந்தைவடிவாக எழுந்தருளியவளே! என்றும், அடைந்தவர் திரும்பப் பிறவாத வீடுபேற்றின்பமான அபிராமி தேவியே என்றும், பல வகைகளில் வர்ணிப்பதனை காணமுடிகின்றது.*

## துணை நின்ற நூல்


1. *நடராசன் பி.ரா. (உ.ஆ), அபிராமி அந்தாதி மூலமும் உரையும், 18, பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை – 600 001. மூன்றாம் பதிப்பு - 2023.*
2. *அருணாசலம் . ப, பக்தி இலக்கியம், முல்லை நிலையம், சென்னை. மறுபதிப்பு - 2007.*
3. *அருணாசலம். மு, திருவாசகம் சில ஆராய்ச்சிக் குறிப்புகள், சைவ சித்தாந்த மையம், சென்னை - 600 001, முதற்பதிப்பு - 1965*
4. *ஔவை துரைசாமி, சிவபுராணம், விரிவுரை தனி வெளியீடு, மதுரை, இறுதிப் பதிப்பு – 1982.*
5. *டாக்டர் கதிர் முருகு, ஆண்டாள் அருளிய திருப்பாவை,சாரதா பதிப்பகம், ஜி – 4, சாந்தி அடுக்ககம், 3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை – 600 014.*